**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>O.S No. 255/2012</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **23.01.2026** |
| **பெயர்** | **சகுந்தலா** |
| **க/பெ** | **முத்து** |
| **சாட்சி** | **PW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 3.33.p.m**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

6. கந்தசாமி, கண்ணன், சின்னப்பன் ஆகிய மூவரும் தனித்தனியாக தான் குடும்பம் நடத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல, ஒரே குடும்பமாக தான் வசித்து வந்தார்கள். என் தந்தைக்கு பெண் பிள்ளைகள் மட்டும் தான் ஆண் பிள்ளைகள் இல்லை. என் தந்தை பஞ்செட்டியில் இருந்தார். நான் திருமணம் ஆகியபின்பு பெரம்பூர்க்கு சென்றுவிட்டேன் என் சகோதரி புழலுக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். என் தாயார் பெயர் முனியம்மள். யார் முதலில் இறந்தது என் தந்தையா, என் தாயாரா என்றால் என் தாயார் இறந்த 1 வாரத்திற்கு பிறகு என் தந்தையும் இறந்துவிட்டார். இருவரும் பஞ்செட்டி கிராமத்தில் தான் இறந்தனர்.

7. என் பெற்றோர்களின் இறப்பிற்கு நாங்கள் இறுதி சடங்கிற்கு வந்தோமா என்றால் வந்தோம். வழக்கு சொத்து வீட்டு மனையா அல்லது விவசாய நிலமா என்றால் விவசாய நிலம். எந்த எந்த ஊரில் வழக்கு சொத்து உள்ளது என்றால் கீழ்மேணி மற்றும் அடம்பாக்கம் கிராமத்தில்

உள்ளது. மேற்சொன்ன இரண்டு ஊர்களிலும் எவ்வளவு நிலம் உள்ளது என்றால் கீழ்மேணியில் 4 ½ ஏக்கர், அடம்பாக்கத்தில் 1 ½ ஏக்கர் உள்ளது. இந்த சொத்துக்கள் அனைத்தும் எப்படி கிடைக்கப்பெற்றது என்றால் என் தகப்பனாரும் அவருடன் உடன் பிறந்த இரண்டு சகோதரர்களும் வைக்கோல் வண்டி ஓட்டி சேர்ந்து சம்பாதித்தார்கள்.

8. மூன்று பேருக்கும் சேர்ந்து பத்திரம் உள்ளதா அல்லது தனித்தனி பத்திரம் உள்ளதா என்றால் கந்தசாமி பெயரில் பத்திரம் செய்துவிட்டார்கள். மூன்று பேரும் சேர்நத வாங்கி கந்தசாமி பெயருக்கு மற்ற இரு நபர்களும் பத்திரம் செய்துவிட்டார்கள். நான் கூறியிருக்கும் சொத்துக்கள் யாரிடம் இருந்து வாங்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கண்ணன் வகையறா கந்தசாமிக்கு பத்திரம் செய்தது உண்மைதானா என்றால் உண்மை தான். அது பொதுவான சொத்து.

9. கண்ணனின் மனைவியான ஆளியம்மாள் அவருடைய சொத்தினை கந்தசாமிக்கு எழுதி கொடுத்தது உண்மையா என்றால் உண்மைதான். ஆளியம்மாள் மூத்தவர் என்பதால் மூவரும் சேர்ந்து அவர் பெயரில் சொத்தினை வாங்கினார்கள். தற்போது கூறும் விவரங்களை வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மோகன்ரெட்டி சொத்துக்கள் வாங்கியது செல்லாது என்று கண்ணன் வாரிசுகள் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு பிறகு தான் மோகன்ரெட்டி 10ம் பிரதிவாதி கம்பெனிக்கு விற்றார்கள் என்றால் தெரியாது.

10. அந்த வழக்கிற்கு பிறகு 10 ம் பிரதிவாதிக்கும் கண்ணன் வாரிசுகளுக்கும் சமாதானம் ஆகி விடுத்லை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என் தந்தை கையொப்பம் இடுவாரா என்றால் கையொப்பம் இடுவார். தமிழில் தான் கையொப்பம்

இடுவார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் தந்தையின் கையெழுத்தா என்றால் சாட்சி பார்த்தபிறகு ஆம் என பதில் கூறினார். **(சாட்சியிடம் காண்பிக்கப்பட்ட அந்த ஆவணத்தில் உள்ள இரண்டாம் கையொப்பங்கள் பி.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 23.01.1984 பதிவு செய்யப்பட்ட உயிலின் மூலம் என் தந்தையும் அவர் சகோதரரும் சேர்ந்த கந்தசாமிக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்றால் அதில் உள்ள கையொப்பம் என் தந்தையினுடையது தான் ஆனால் அது குறித்து நான் சொல்வதற்கு எதுவும் இல்லை.

11. என் தந்தையே அவருக்கு உரிமையான தாவா சொத்தை கந்தசாமிக்கு எழுதி கொடுத்துவிட்டதால் அந்த சொத்தில் நானும் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. பெண்பிள்ளைகள் நாங்கள் இருவரும் திருமணம ஆகி எங்கள் கணவரின் வீட்டிற்கு சென்ற பிறகு எங்கள் சித்தப்பாவான கந்தசாமி தான் நல்லது , கெட்டது பார்த்து வந்தார்கள் என்றால் சரிதான். என் தந்தைக்கும், என் சித்தப்பாவான கந்தாசமிக்கும் வயது வித்யாசம் சுமார் 10 வருடம் இருக்கும். என் தந்தை தான் என் சித்தப்பாவிற்கு திருமணம் செய்து வைத்தாரா என்றால் சரிதான். என் தந்தை தான் கந்தசாமிக்கு திருமணம் செய்து வைத்தார்.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 4.00. p.m.**